<u>இந்து சமய அறநிலையத்துறை</u>

| <u>அனுப்புநர்</u> | <u>பெறுநர்</u> |
|---|---|
| க.பணீந்திரரெட்டி,இ.ஆ.ப., | இணை ஆணையர் |
| முதன்மைச் செயலாளர்/ ஆணையர், | இந்துசமய அறநிலையத்துறை |
| சென்னை 34. | மதுரை |

30 MAY 2019
005388

**<u>ந.க. எண் 21458/ 2019/ ஜி2 நாள் 16.5.2019</u>**

ஐயா,

பொருள்: புகார் மனு – ஆணையர் ஆய்வுகுறிப்பு நாள் 9.5.2019 குறைகள் நிவர்த்தி செய்தல் – அருள்மிகு சுந்தரமகாலிங்கசுவாமி திருக்கோயில் – சதுரகிரி – சாப்டூர் – பேரையூர் வட்டம் – மதுரை மாவட்டம் – தொடர்பாக

பார்வை: 1.பலதரப்பட்ட மனுக்கள்
2.முதன்மைச் செயலாளர்/ஆணையர், சென்னை ஆய்வு நாள் 9.5.2019

----

பார்வை 1ல் காணும் தொடர் புகார் மனுக்களின் அடிப்படையில், 9.5.2019 அன்று முதன்மைச் செயலாளர்/ஆணையரால் திருக்கோயிலை ஸ்தல ஆய்வு செய்யப்பட்டு, அதனடிப்படையில் கீழ்காணும் குறைபாடுகளை களைய உரிய நடவடிக்கை மேற்கொண்டு அறிக்கையனுப்ப இணை ஆணையரைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

- மலையேறும் பாதையிலுள்ள பாறைகள் மழைக்காலத்தில் வழுக்கும் தன்மையுடையதாக இருப்பதால், அப்பாறைகளை சேவார்த்திகள் மலையேறுவதற்கு ஏதுவாக படிக்கட்டுகளாக செதுக்கிட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

- அப்பாதைகளில் பள்ளத்தாக்காக உள்ள இடங்களில் கைப்பிடி தடுப்புகளை அமைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- உபயதாரர்கள் மூலம் கட்டப்பட்டுள்ள இரண்டு பக்தர்கள் தங்கும் விடுதிகளை செப்பனிட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- பக்தர்கள் தங்கும் விடுதி, முடி காணிக்கை மண்டபம், குளியலறை மற்றும் கழிவறை ஆகியவற்றை பக்தர்கள் அறியும் வண்ணம் வழிகாட்டி பலகைகள் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- அமாவாசை மற்றும் பௌர்ணமி நாட்களில் கூட்டத்தை தன்னார்வ தொண்டர்களைக் கொண்ட கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டம். திருக்கோயிலின் பணியாளர்கள் குறைவாக உள்ளதால் மேற்படி தினங்களில் தினக்கூலி பணியாளர்களை பணியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்

- காஞ்சிமடத்தின் கழிவுகளை வெளியேற்றும் வழிமுறை (system) சரியில்லாமல் இருப்பதாக அறிய வருகிறது. அன்னதானம் மற்றும் சமையல் கூடத்தின் கழிவுகள் மண்டபத்தின் பின்பகுதியில் தேங்காமல் (stagination) சுத்தமாக இருக்கும் வண்ணம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

- காஞ்சிமட நிர்வாகிகள் திருக்கோயிலிடம் தண்ணீர் கேட்டுள்ளனர். பிள்ளைவாடி கருப்பண்ணன் கிணறு 3 மணி நேரத்தில் 7500 லிட்டர் தண்ணீர் தருகிறது. திரும்பவும் அக்கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்க 8 மணி நேரம் ஆகிறது. எனவே, ஒரு நாளைக்கு மேற்படி கிணற்றிலிருந்து 15000 லிட்டம் தண்ணீர் சுரக்கிறது.

'85200

- அருள்மிகு சுந்தரமகாலிங்கம் சன்னதி அருகிலுள்ள கிணற்றிலிருந்து தண்ணீர் 80,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தண்ணீர் தொட்டியில் சேமிக்க 10 நாட்கள் ஆகிறது. அதன்படி அமாவாசை மற்றும் பௌர்ணமி உள்ளிட்ட நான்கு நாட்களில் தினசரி 20,000 லிட்டர் தண்ணீர் மேற்படி கிணற்றிலிருந்து கிடைக்கிறது. அதுபோக ஒரு கை இறைப்பான் (Hand Pump) மற்றும் சில ஆழ்துளை கிணறுகள் (Borewell) மூலம் மற்ற நாட்களில் தினசரி தேவைகளுக்கு போதுமான அளவு தண்ணீர் கிடைக்கிறது.

- எனவே, மேற்குறிப்பிட்ட இரண்டு கிணறுகள் மூலம் போதுமான அளவு தண்ணீர் கிடைக்கின்ற காரணத்தினால் காஞ்சிமடத்திற்கு தற்காலிகமாக குறைந்தபட்சம் தண்ணீரை பணியாளர்களின் தேவைக்காகவும், 500 பக்தர்களின் அன்னதானத்திற்காகவும் வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- காஞ்சிமடத்தின் நிர்வாகத்திடம் வனத்துறையின் திருப்திகேற்ப கழிவு மேலாண்மை திட்டத்தை சமர்ப்பித்திட கேட்டுக்கொள்ள வேண்டும்.

- தற்காலிக கடைகளில் நெகிழி (plastic) பயன்பாடு அதிகமாக உள்ளது. அதனை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- மேற்டி தற்காலிக கடைகளை பூஜைப்பொருட்கள் விற்பனை செய்வதற்காக அமைக்கப்பட்டது. ஆனால் சில கடைகள் எவ்வித முன்னெச்சரிக்கை நடவடிக்கை வசதிகள் மற்றும் கழிவுகள் வெளியேற்றும் வசதிகள் இல்லாமல் உணவகங்களாக செயல்பட்டு வருகிறது. மேற்படி கடைகளை சட்டப்படி காலி செய்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேற்கண்ட அறிவுரைகளின் மீது நடவடிக்கை மேற்கொண்டு எடுக்கப்பட்ட ஏற்பாடுகள் குறித்து அறிக்கை அனுப்ப கேட்டுக்கொள்ளப்படுகிறது.

20.5.19

இணை ஆணையர்

(கல்வி மற்றும் தொண்டு நிறுவனங்கள்)

ஆணையருக்காக

27 மிகை

20/5/19

E:\2019\g2\podhu.docx